தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 5.03.2013 A.M

### "விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முதல்வர் உறுதி'

காரைக்காலில் வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முதல்வர் ரங்கசாமி உறுதியளித்துள்ளதாக காரைக்கால் நகரமைப்புக் குழுமத் தலைவரும், அகில இந்திய என்.ஆர்.காங்கிரஸ் கட்சி துணைத் தலைவருமான கே. கோவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.

புதுவை முதல்வர் என். ரங்கசாமியை திங்கள்கிழமை சந்தித்தது குறித்து அவர் கூறியது:

தண்ணீர் இல்லாததால் காரைக்கால் பகுதியிலும் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது.

தமிழகத்தில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் பாதிப்பை கருதி, அம்மாநில அரசு நிவாரணம் வழங்குவதை சுட்டிக்காட்டி, காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டுமென முதல்வர் ரங்கசாமியை திங்கள்கிழமை சந்தித்து வலியுறுத்தினோம்.

அதிகாரிகளுடன் கலந்து பேசி காரைக்கால் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை வழங்குவதாக முதல்வர் உறுதியளித்துள்ளார். முதல்வரின் கருத்துப்படி விரைவில் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கும் என்றார் அவர்.

### உடுமலை தர்பூசணி விவசாயிகள் ஏமாற்றம்

கொளுத்தும் கோடை வெயிலில் தர்பூசணி விற்பனை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. இதனால், குறைந்த அளவே தர்பூசணி பயிரிட்டிருந்த உடுமலை பகுதி விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த ஆண்டு வறட்சி காரணமாக குறைந்த அளவே தர்பூசணியை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். இந் நிலையில், பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் அறுவடை துவங்கிய நிலையில் கடந்த மூன்று வாரமாக உடுமலை தர்பூசணிக்கு கிராக்கி இருந்து வந்தது. அதிகபட்சமாக விவசாயிகளிடம் கிலோ ரூ.8 முதல் ரூ.15 வரை கொள்முதல் செய்யப்பட்டது.

கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தர்பூசணி கொள்முதல் செய்ய வியாபாரிகள் உடுமலைக்கு அதிகளவில் வரும் நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில் குறைந்த அளவே பயிரிடப்பட்டிருந்ததால், தர்பூசணி அறுவடை விரைவில் முடிந்தது உடுமலை விவசாயிகளிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால், வெளியூர்களில் இருந்து தர்பூசணியை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

ஆண்டுதோறும் திருவண்ணாமலை, கடலூர், பண்ருட்டி பகுதிகளில் பயிர் செய்யப்படும்

தர்பூசணிப் பழங்கள் தென்னிந்தியா முழுவதும் விற்பனைக்கு கொண்டு வரப்படும். அங்கிருந்து வரும் ஹைபிரட் தர்பூசணி அதிக சுவையாக இருப்பதால், பொதுமக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

இதுகுறித்து, உடுமலை தர்பூசணி விவசாயிகள் கூறுகையில், 75 நாள் பயிரான ஹைபிரட் தர்பூசணி, இந்தாண்டு வறட்சி காரணமாக உடுமலை வட்டத்தில் சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டிருந்தது. ஏக்கருக்கு 10 முதல் 12 டன் வரை விளைச்சல் கிடைத்தது. நல்ல விளைச்சலுடன் ருசியும் இருந்ததால் உடுமலை தர்பூசணியை மக்கள் விரும்பி வாங்கினர்.

ஆனால், விளைச்சல் குறைவாக இருந்ததால் வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய பழங்கள் இல்லை. கடலோர மாவட்டங்களில் இருந்து வரும் தர்பூசணி தான் இப்போது விற்பனை செய்யப்படுகிறது என்றனர்.

## அடையாள எண் பெறாத உரக்கடைகளின் உரிமம் ரத்து: விவசாயத் துறை அறிவிப்பு

தேனி மாவட்டத்தில் உரக் கண்காணிப்பு மேலாண்மை திட்டத்தின் கீழ் மார்ச் 10ஆம் தேதிக்குள் அடையாள எண் பெறாத மொத்தம் மற்றும் சில்லரை உர விற்பனைக் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு: உரம் விற்பனை கடைகள் அலைபேசி வழி உரக்கண்காணிப்பு மேலாண்மை திட்டத்தின் கீழ் அடையாள எண் பெற வேண்டும் என்று அரசு கடந்த 2012-ம் ஆண்டு, நவம்பர் மாதம் அறிவித்துள்ளது.

இதன்படி மாவட்டத்தில் உரக் கடைகளுக்கு அடையாள எண் ஒதுக்கீடு செய்யும் பணியில் இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் உர நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை அடையாள எண் பெறாத உரக் கடை நிறுவனங்கள் மார்ச் 10ஆம் தேதிக்குள் அடையாள எண் பெற்றுக்கொள்ள வேண்டும். அடையாள எண் இல்லாமல் செயல்படும் உரக் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும்.

மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உரத்தை வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களின் தேவைக்கு விற்பனை செய்யக் கூடாது. அரசு நிர்ணயித்த விலையில், விவசாய பயன்பாட்டுக்கு மட்டும் உரம் விற்னை செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயறு வகை பயிர் சாகுபடிக்கு மானியம்

தேனி மாவட்டத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் விதை கிராமத் திட்டம் ஆகியவற்றின் கீழ், வேளாண்மைத் துறை மூலம் மானிய விலையில் விதை, உரம் மற்றும் பூச்சி மருந்து வழங்கப்படுகின்றன.

இது குறித்து, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவதால், அதிக கலப்பினம் இல்லாத பயிர்

விளைச்சல் மற்றும் கூடுதல் மகசூல் பெறமுடியும். சான்று பெற்ற பாசிப்பயறு உள்ளிட்ட பயறு விதைகளுக்கு விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவிகிதம் வரை, அதாவது கிலோ ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ. 40 வரை மானியம் வழங்கப்படுகிறது. மேலும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 12 மானியம் வழங்கப்படும். மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் பாசிப் பயறு, துவரை, உளுந்து, தட்டப்பயறு உள்ளிட்ட சான்று பெற்ற பயறு வகை பயிர் விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இயற்கை பூச்சி மருந்துகள் 50 சதவிகிதம் மானியத்தில் விற்பனை செய்யப்படுகின்றன என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவு பதப்படுத்துதல் செயல்முறை விளக்கம்

கொடைக்கானலில் உணவு பதப்படுத்துதல் குறித்த செயல்முறை விளக்க முகாம் நடைபெற்றது.

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் மனையியல் துறை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம் இணைந்து உணவுப் பதப்படுத்துதல் என்னும் தலைப்பில் பயிற்சி மற்றும் செயல்முறை விளக்க முகாம் நடைபெற்றது. விழாவை பல்கலைக்கழக பேராசிரியை வாசுகி ஜெயரத்தினம் தொடங்கி வைத்து பழங்கால உணவு முறைகளின் முக்கியத்துவத்தையும்,தமிழர்களின் தொன்மையான உணவு பதப்படுத்துதல் மற்றும் பல்வேறு வழிமுறைகள் பற்றியும் விளக்கி கூறினார். தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் வள்ளி தேவசேனா சிறப்புரையாற்றினார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற இம் முகாமில் பழங்களை பதப்படுத்துதல், மலிவு விலைப் பொருட்கள்,பழ வகைகள், மலர்கள், காய்கறிகள் ஆகியவற்றை பதப்படுத்துதல் குறித்து கீதாஞ்சலி, சிந்தாமணி, கவிப்ரியா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

## வறட்சி நிவாரணத்தை எதிர்நோக்கும் விவசாயிகள்

திருவாடானை தாலுகாவில் நடப்பு சம்பா பருவத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அரசு நிவாரணம் எப்போது கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளனர்.

திருவாடானை தாலுகா தமிழகத்தின் இரண்டாவது நெல் களஞ்சியம் ஆகும். இங்கு சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. நடப்பு சம்பா பருவத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவு செய்த நிலையில், பருவ மழை பொய்த்ததால் பயிர்கள் சாவியாகிவிட்டன.

தமிழகம் முழுவதும் வறட்சி ஏற்பட்டதால் தஞ்சை மாவட்டத்திற்கு அரசு நிவாரணம் அறிவித்துள்ளது, மற்ற 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக தமிழக அரசு அறிவித்துள்ளது. ஆனால் வறட்சி நிவாரணம் எவ்வளவு எனத் தெரியாமல் விவசாயிகள் உள்ளனர்.

இது குறித்து பில்லுகுடி விவசாயி ராமநாதன் கூறுகையில், நடப்பு சம்பா பருவத்தில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் செலவு செய்து பருவ மழை பொய்த்து விட்டதால் பயிர்கள் சாவியாகிவிட்டன. இந் நிலையில், கால்நடைக்கு உணவாக இருந்த சாவியும் சில நாள்களுக்கு

முன் பெய்தமழையில் அழுகி விட்டன. இதனால் கால்நடைக்கும் தீவனம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழக அரசு வறட்சி நிவாரணத்தை விரைவில் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

## பவானிசாகர் நீர்மட்டம் 33.72 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 33.72 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 215 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.57 டி.எம்.சி.

## விவசாயிகளுக்கு பயிற்சி

ஆரணி ஒன்றியம், ஒகையூர் கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு முன்பருவப் பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் நெல் வயலில் உயிர் உரங்களை பயன்படுத்துவது, எஸ்.ஆர்.ஐ. நடவு செய்தல், உளுந்து பயிரிடுதல், விதை உற்பத்தி செய்தல் குறித்த தொழில்நுட்பங்கள் விளக்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் மணி தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி பார்த்திபன் முன்னிலை வகித்தார். ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் வே.சத்தியமூர்த்தி வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

தச்சூரில்...: மேற்குஆரணி வட்டாரம், தச்சூரில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அண்மையில் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் இ.செந்தில்குமார் தலைமை தாங்கினார். சூயப் தொண்டு நிறுவனத் தலைவர் பிரமிளா நிர்மலாகுமாரி சிறப்புரை ஆற்றினார்.

## 15-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், மார்ச் 15-ம் தேதி நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்தில் அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்க உள்ளனர்.

எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களின் குறைகள், கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை கொடுத்து நிவர்த்தி பெறலாம்.

மேலும், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களின் கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை இம்மாதம் 7ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து

வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளில் போடலாம்.

இம்மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், பதில் அளிக்கப்படும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

### பூச்சிமருந்து அடித்த விவசாயி சாவு

திருவண்ணாமலையை அடுத்த மங்கலம், குன்னுமுறிஞ்சி கிராமத்தைச் சேர்ந்தவர் பச்சையப்பன் மகன் முருகன் (35). இவர் ஞாயிற்றுக்கிழமை கரும்புப் பயிருக்கு பவர் ஸ்பிரே இயந்திரம் மூலம் பூச்சி மருந்து அடித்துள்ளார்.

அப்போது, காற்று எதிர்திசையில் வீசியதில், முருகனின் மூக்கு, வாய் வழியாக பூச்சி மருந்து உள்ளே சென்றதாகத் தெரிகிறது. இதனால் பாதிக்கப்பட்ட அவர் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திங்கள்கிழமை இறந்தார்.

### கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்க கிருஷ்ணகிரி விவசாயிகளுக்கு அழைப்பு

மத்திய அரசின் கெயில் நிறுவனம் செயல்படுத்தி வரும் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் குறித்து சென்னையில் வருகிற 7-ஆம் தேதி நடைபெற உள்ள கருத்துக் கேட்பு கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பங்கேற்று, தங்களது கருத்துகளை தெரிவிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய அரசின் கெயில் நிறுவனம் சார்பில், கேரளத்தின் கொச்சியிலிருந்து கர்நாடக மாநிலம் பெங்களூர் வரை, இயற்கை எரிவாயு குழாய் பதிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு தொடங்கிய இந்தத் திட்டம் தமிழக்ததில் கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களின் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

எனவே, விவசாயிகளின் பாதிப்புக் குறித்து அறிய விவசாயிகளிடம் கருத்துக் கேட்கும் கூட்டம் வருகிற 7-ஆம் தேதி சென்னையில் அரசு தலைமைச் செயலர் தலைமையில் நடைபெற உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் செயல்படுத்தும் ஒசூர், தேன்கனிக்கோட்டை ஆகிய வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று, தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம். அண்ணா மேலாண்மை நிலை கூட்டரங்கம், 1611, பி.எஸ்.குமராசாமி ராஜா சாலை, ராஜ அண்ணாமலைபுரம் சென்னை என்ற முகவரியில் கூட்டம் நடைபெறவுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 29.41 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 29.41 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 138 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 300 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 4,004 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

### சீர்காழியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள் முழுவதற்கும் நிவாரணம் அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, நாகை மாவட்டம், சீர்காழியில் விவசாயிகள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பயிர்க் காப்பீடு இழப்பீட்டை நிவாரணத் தொகையில் சேர்த்துக் கணக்கிடக் கூடாது. வறட்சி நிவாரணத் தொகைப் பெற விவசாயிகள் உறுதிமொழி (பயிர்க் காப்பீடு இழப்பீடு உரிமை கோராமலிருக்க) பத்திரம் அளிக்க வேண்டு0ம் என்ற நடைமுறையைக் கைவிட வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள் முழுமைக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில், கூடுதல் நிதியை நிவாரணத்துக்கு ஒதுக்கீடு செய்து, நிவாரணத் திட்டத்தை விரிவுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் முன் கொள்ளிடம் ஒன்றிய விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு சங்கத்தின் செயல் தலைவர் சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். டெல்டா மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்புப் பொதுச் செயலாளர் ஆறுபாதி ப . கல்யாணம் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

சங்கத்தின் செயலாளர் விஸ்வநாதன், பொருளாளர் பாஸ்கரன், சீர்காழி தாலூகா விவசாயிகள் சங்கத் தலைவர் வாகீசன் மற்றும் சீர்காழி, கொள்ளிடம் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாடத்தின் நிறைவில், சீர்காழி வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

### திருவேட்டக்குடி பகுதி விவசாயிகள் மீது அரசு சிறப்பு கவனம் செலுத்த வலியுறுத்தல்

திருவேட்டக்குடி பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும்போது அரசு சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

காரைக்கால் மாவட்டம், திருவேட்டக்குடி அரசாபுரம் வாய்க்கால் பாசனதாரர் சங்கத் தலைவர் எம். செந்தில்நாதன் தலைமையிலான நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியர் ஜெ. அசோக்குமாரிடம் திங்கள்கிழமை அளித்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவித்து, புதுவை அரசு நிவாரணம் வழங்க வேண்டும். கோட்டுச்சேரி கொம்யூனில் உள்ள திருவேட்டக்குடி கிராம சுற்றுவட்டாரப் பகுதி 2004-2013 வரை சுனாமி, நிஷா புயல், தானே புயல், காவிரி நீர்வரத்தின்மை, பருவமழை பொய்த்தது

உள்ளிட்ட பல்வேறு இடர்பாடுகளால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகிறது. வேளாண் துறை அறிவுறுத்தல்படி, 2012-ம் ஆண்டு நேரடி நெல் விதைப்பு செய்தும், போதிய நேரத்தில் தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகிவிட்டன. விவசாயத்தை மட்டுமே இந்தப் பகுதி விவசாயிகள் முழுமையாக நம்பியுள்ளனர். விவசாயம் பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

புதுவை அரசு நிவாரணம் என்று அறிவிக்கும்போது, திருவேட்டக்குடி விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.50 ஆயிரம், விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கவேண்டும்.

இந்த கோரிக்கையை புதுவை அரசு ஏற்காவிடில், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்துள்ளனர்.

## பாபநாசம் அணை ஓரிரு தினங்களில் மூடல்

பாபநாசம் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 42.85 அடியாகக் குறைந்துவிட்டது. எனவே, ஓரிரு தினங்களில் அணை மூடப்படலாம் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தாமிரவருணி பாசனத்தில் தென்மேற்குப் பருவம், வடகிழக்குப் பருவம் ஆகிய 2 பருவங்களில் பெய்யும் மழையின் மூலம் கிடைக்கும் நீரினை திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளில் சேமித்து வைத்து, பாசனம் மற்றும் குடிநீர்த் தேவைக்கு வழங்கப்படுகிறது.

கடந்த 2012ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவமழை பொய்த்ததால் இம்மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. அப்பருவத்தில் கார் பருவ சாகுபடி செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டது. வடகிழக்குப் பருவத்திலும் சரிவர மழை பெய்யாத காரணத்தால் அணைகள் நிரம்பவில்லை.

அணைகளில் உள்ள நீர்இருப்பைக் கொண்டு திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாசனம் பெறும் நிலங்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டது. எனினும், இப்பாசனத்தில் முழுமையாக சாகுபடி செய்யப்படவில்லை.

இதனால், பாசனத்துக்கு அணையிலிருந்து சுழற்சி முறையில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இதற்கிடையே, திங்கள்கிழமை பாபநாசம் அணையின் நீர்மட்டம் 42.85 அடியாகக் குறைந்தது. அணைக்கு விநாடிக்கு 136 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பாசனம், குடிநீர்த் தேவைக்காக 505 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 56.04 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 80.34 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 10 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் பெருங்கால் மதகில் 30 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 42 அடியாகக் குறைந்துள்ள நிலையில், தொடர்ந்து அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட சாத்தியமில்லை எனக் கருதப்படுகிறது.

பிசான பருவ நெல் அறுவடை செய்ய இன்னும் 10 தினங்களுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், பாபநாசம் அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதால், ஒருசில தினங்களில் அணை மூடப்படும் என பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

5.03.2013 A.M

**தரமான தேயிலையை உற்பத்தி செய்ய அறிவுரை: டான்டீ தொழிற்சாலை அலுவலர்களுக்கு பயிற்சி**

பந்தலூர்:பந்தலூர் அருகே சேரம்பாடி கார்டன் மருத்துவமனை வளாகத்தில், டான்டீ தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.

பொது மேலாளர் ஜார்ஜ் ஜான் வரவேற்றார். டான்டீ நிர்வாக இயக்குனர் டாக்டர் பாலாஜி பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:

கேரள மாநிலம் வயநாடு பகுதியை ஒட்டிய இப்பகுதியில் தனியார் மற்றும் டான்டீ தேயிலை தொழிற்சாலைகளுக்கு இடையே 5 முதல் 7 ரூபாய் வரை விலை வித்தியாசப்படுகிறது. அதேபோல், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் 15 ரூபாய் வரை விலை வித்தியாசப்படுகிறது. இதனால், பல்வேறு பிரச்னைகள் உருவாகின்றன. டான் டீயில் உற்பத்தியாகும் தூளுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், தரமான உற்பத்தியை மேற்கொள்ள இந்த பயிற்சிமுகாம் நடத்தப்படுகிறது.

தேயிலை தூள் மார்க்கெட்டில் ஏற்ற தாழ்வு ஏற்பட்டபோதும் தரமான தேயிலை தூளை தயாரித்தால் எந்த காலகட்டத்திலும் நல்ல விலை பெற இயலும். முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த தொழிலிலும் சாதனை புரிய இயலும். பந்தலூர் சுற்றுவட்டார பகுதி டான்டீ தொழிற்சாலைகளில் பணியாற்றும் 50 பேருக்கு, யோகா பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.தற்போது, மதுரை பகுதியில் வரவேற்பை பெற்றுள்ள "டிப்டீ' சென்னை, திருச்சி, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். வரும் காலங்களில் டான்டீ நிர்வாகம் லாபத்துடன் செயல்படுவதுடன்,தொழிலாளர்கள், அலுவலர்களுக்கான தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றிதரப்படும்.

இவ்வாறு பாலாஜி பேசினார்.

தொடர்ந்து, தொழிற்சாலை அலுவலர்கள்-கோட்டமேலாளர்கள் மத்தியில் தனி தனிகுழுக்கள் ஏற்படுத்தி, தரமான தேயிலை தூள் தயாரிப்பதுகுறித்த ஆலோசனைகள் கேட்கப்பட்டது.மாலை 5:00 மணி வரை நடந்தபயிற்சிமுகாமில், கேரள மாநிலம் கொச்சின், குன்னூர் பகுதிகளை சேர்ந்த தேயிலை தூள் கொள்முதல் நிலையத்தின் அலுவலர்கள் பயிற்சிஅளித்தனர்.

இதில், பொது மேலாளர் ஜெபராஜ், கோட்ட மேலாளர்கள் சுந்தர்ராஜன், உடையப்பன், சம்பத்,தேவராஜ், பட்டத்து ராஜன் மற்றும் தொழிற்சாலை அலுவலர்கள்,பணியாளர்கள் பங்கேற்றனர். சேரம்பாடிகோட்ட மேலாளர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்ததுடன் நன்றி கூறினார்.

**கொப்பரைக்கு கூடுதல் விலை வழங்க வேண்டும்**

ஆனைமலை:"கொப்பரைக்கு, கர்நாடகா மற்றும் கேரளாவில் வழங்கப்படுவதை போன்று, தமிழக அரசு சார்பிலும் கூடுதல் விலை வழங்க வேண்டும்' என்று, தென்னை விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.கேரளா, கர்நாடகா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில், தேங்காய் விலை சரிவை தடுக்க, கொப்பரைக்கான ஆதரவு விலையை, மாநிலங்களுக்கு தகுந்தவாறு, மத்திய அரசு நிர்ணயிக்கிறது.

ஆதரவு விலைஇதன்படி, கடந்த ஓராண்டாக, தமிழக கொப்பரைக்கான ஆதரவு விலை, கிலோவுக்கு, 51 ரூபாய் என்ற வகையில் வழங்கப்பட்டு வருகிறது.கொப்பரையை, தமிழக வேளாண் கூட்டுறவு இணையமும், கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியும் கொள்முதல் செய்து, மத்திய அரசின், தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்திடம் ஒப்படைக்கின்றன. கடந்த மாதம் முதல் வாரத்தில், கொப்பரைக்கான கொள்முதல் விலையை கிலோவுக்கு 1.50 ரூபாய் என்ற வகையில், மத்திய அரசு உயர்த்தியது; எனினும், புதிய விலையில் கொள்முதல் இன்னமும் துவங்கவில்லை.தமிழகத்தில், 3.84 லட்சம் ஹெக்டேர் பரப்பில் தென்னை விவசாயம் நடக்கிறது. இந்தியாவில், ஆண்டுக்கு, 342 கோடி தேங்காய்கள் உற்பத்தி ஆகின்றன. தேங்காய் உற்பத்தி:இந்திய அளவில், தேங்காய் உற்பத்தியில் தமிழகம், இரண்டாமிடத்தில் உள்ளது. இங்கு, 4 லட்சம் டன் கொப்பரை உற்பத்தியாகிறது.ஒரு கிலோ கொப்பரைக்கு, மத்திய அரசு, அறிவித்துள்ள, 52.50 ரூபாய் ஆதரவு விலை, போதுமானதாக இல்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கர்நாடகாவில், பால் கொப்பரைக்கு மத்திய அரசு, 55 ரூபாயும், மாநில அரசு, 7 ரூபாயும் ஆதரவு விலை வழங்குகின்றன. இதன் மூலம், அங்குள்ள விவசாயிகளுக்கு கிலோவுக்கு, 62 ரூபாய், கிடைக்கிறது. கேரளாவும் இதேபோன்று வழங்குகிறது. அங்கு, மத்திய அரசு கிலோவுக்கு, 51 ரூபாயும், மாநில அரசு, 5 ரூபாயும் என, மொத்தம், 56 ரூபாய் வழங்கப்படுகிறது.ஆனால், தமிழக விவசாயிகளுக்கோ மத்திய அரசின் 51 ரூபாய் அளவிலான ஆதரவு விலை மட்டுமே வழங்கப்படுகிறது. மாநில அரசின் சார்பில், ஆதரவு விலை வழங்கப்படுவதில்லை. என@வ, கர்நாடகா மற்றும் கேரளாவில் வழங்கப்படுவது போன்று, தமிழக அரசும், ஆதரவு விலையை அறிவித்து, தென்னை வேளாண்மையை காப்பாற்ற வேண்டுமென்று, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

புறக்கணிப்பு:இதுகுறித்து, தென்னிந்திய தென்னை சாகுபடியாளர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணசாமி கூறியதாவது: தமிழகத்தில் தென்னை விவசாயத்தை காப்பாற்ற, தமிழக அரசு எவ்வித உதவிகளையும் செய்யவில்லை. விவசாயிகள் அடியோடு புறக்கணிக்கப்படுகின்றனர். தேங்காய்க்கும், கொப்பரைக்கும் குறைவான விலையே கிடைப்பதால், விவசாயத்தை தொடர முடியாத வேதனையில் உள்ளனர்.எனவே, கர்நாடகா, கேரளாவில் வழங்கப்படுவதை போன்று, தமிழகத்திலும், கொப்பரைக்கு, கூடுதல் ஆதரவு விலை வழங்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**கோதுமை ஏற்றுமதி 40 லட்சம் டன்**

புதுடில்லி:நடப்பு நிதியாண்டில், பிப்ரவரி 22ம் தேதி வரையிலுமாக, 40.30 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. இதில், பாதிக்கும் மேற்பட்ட கோதுமை, அரசின் கையிருப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டு உள்ளது என, மத்திய உணவு அமைச்சர் கே.வி.தாமஸ், பார்லிமென்டில் தெரிவித்தார்.பொது உரிமம்;உள்நாட்டில், கோதுமை உற்பத்தி அதிகரித்ததை அடுத்து கடந்த, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பொது உரிம அடிப்படையில், கோதுமை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த, 2012ம் ஆண்டு ஜூன் மாதத்தில், மத்திய அரசின் முகமை அமைப்புகளின் சேமிப்பு கிடங்குகளில் இருந்தும், ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.இதையடுத்து கடந்த, 2011-12ம் நிதியாண்டில், 7.41 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதியானது. இதில், ஒரு லட்சம் டன், மனிதாபிமான அடிப்படையில், மத்திய அரசின் தொகுப்பில் இருந்து, ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டது.நடப்பு நிதியாண்டில், மத்திய அரசின் தொகுப்பில் இருந்து, 20.70 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. இதில், 35 ஆயிரம் டன் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. கடந்த, 2009-10 மற்றும் 2010-11 ஆகிய நிதியாண்டுகளில், மத்திய தொகுப்பில் இருந்து, கோதுமை ஏற்றுமதி மேற்கொள்ளப்படவில்லை. சென்ற பிப்ரவரி 1ம் தேதி நிலவரப்படி, மத்திய அரசின் தொகுப்பில், 3.08 கோடி டன் கோதுமை கையிருப்பில் உள்ளது. சாதனை:உள்நாட்டில், கோதுமைக்கான தேவை, 1.12 கோடி டன் என்ற அளவில் தான் உள்ளது. எனவே, தேவையை விட, கையிருப்பு அதிகமாக உள்ளதால், ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.கடந்த, 2011-12ம் வேளாண் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின் தானிய உற்பத்தி, 25.93 கோடி டன்னாக அதிகரித்தது. இதையடுத்து, இந்திய உணவு கழகம் உள்ளிட்ட முகமை அமைப்புகளின் தானிய கொள்முதல் மிகவும் அதிகரித்தது.நாட்டின், மொத்த தானியங்கள் உற்பத்தியில், கடந்த வேளாண் பருவத்தில், கோதுமை உற்பத்தி, இதுவரை இல்லாத அளவிற்கு, 9.49 கோடி டன்னாகவும், நெல் உற்பத்தி, 10.53 கோடி டன்னாகவும் இருந்தது என, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**நாட்டின் பருப்பு உற்பத்தி1.75 கோடி டன்னாக அதிகரிக்கும்**

புதுடில்லி:நடப்பு வேளாண் பருவத்தில் (ஜூலை-ஜூன்), நாட்டின், பருப்பு வகைகள் உற்பத்தி, 1.75 கோடி டன்னாக அதிகரிக்கும். இது, சென்ற பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 5 லட்சம் டன் அதிகம் என, இந்திய பருப்பு மற்றும் தானியங்கள் உற்பத்தியாளர் கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது.சர்வதேச அளவில், பருப்பு வகைகள் உற்பத்தி, பயன்பாடு மற்றும் இறக்குமதியில், இந்தியாவின் பங்களிப்பு, மிக அதிக அளவில் உள்ளது. கனடா, ஆஸ்திரேலியா, மியான்மர், அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து, இந்தியா, பருப்பு வகைகளை இறக்குமதி செய்து கொள்கிறது.

இந்தியாவுடன் ஒப்பிடும் போது, மேற்கண்ட நாடுகளில், பருப்பு வகைகள் விலை குறைவாக உள்ளது. இதனால், இதன் இறக்குமதி அதிகரித்து கொண்டே வருகிறது. சென்ற நிதியாண்டில், நாட்டின் பருப்பு வகைகள் இறக்குமதி, 16.4 சதவீதம் அதிகரித்து, 8,767 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது.இதனால், உள்நாட்டு பருப்பு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, உள்நாட்டில், பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், இதன் இறக்குமதி மீது, 10 சதவீத சுங்க வரி விதிக்க வேண்டும் என, வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் (சி.ஏ.சி.பி.,), மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.நடப்பு நிதியாண்டில், நாட்டின் கொண்டைக் கடலை உற்பத்தி, 85.70 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற நிதியாண்டில், 77 லட்சம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**காடு வளர்ப்பு திட்டம்: கலெக்டர் ஆலோசனை**

விழுப்புரம்:தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் குறித்து பி.டி.ஒ.,க்களுக்கு நிர்வாகக் குழு கூட்டம் நடந்தது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில், தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டம் குறித்து பி.டி.ஒ.,க்களுக்கான நிர்வாகக் குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். மாவட்ட திட்ட அலுவலர் முத்துமீனாள், மாவட்ட வன அலுவலர் சுஜாதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தில் பிறதுறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். வனத்துறையின் மூலம் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் சிமென்ட் சாலை, தார்சாலை உள்ளிட்ட அடிப் படை வசதிகள் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.இதில் மாவட்டத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்திற்கு உட்பட்ட பி.டி. ஓ.,க்கள் மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**மக்காச்சோளம்வரத்து குறைவு**

சின்னசேலம்:சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச் சோளம் வரத்து குறைந்தது.சின்னசேலம் மார்கெட் கமிட்டிக்கு நேற்று 250 மூட்டை மக்காச்சோளம் வந்தது. அதிகபட்சமாக 1,392 ரூபாயும், குறைந்தபட்சமாக 1,352 க்கும் விலைபோனது. கடந்த வாரம்

1,400 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு, 19லட்சத்து 29,000 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது.

**எண்ணை பனை விவசாயிகளுக்குபராமரிப்பு மான்ய நிதி காசோலை**

சங்கராபுரம்:சங்கராபுரத்தில் எண்ணை பனை விவசாயிகளுக்கு பராமரிப்பு நிதிக்கான காசோலை வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் ஒன்றிய சேர்மன் அரசு தலைமை தாங்கினார். ஒன்றிய சேர்மன்கள் கள்ளக்குறிச்சி ராஜசேகர், சின்னசேலம் ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். வேளாண் அலுவலார் விஜயகுமார் வரவேற்றார்.அமைச்சர் மோகன் பங்கேற்று, 50 விவசாயிகளுக்கு எண்ணை பனை பெருக்கத்திட்டத்தின் கீழ் பராமரிப்பு மான்ய நிதிக்கான காசோலை வழங்கினார். பேரூராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி, நகர செயலாளர் நாராயணன், குசேலன், உதவி வேளாண் அலுவலர்கள் அப்பாஸ், மைக்கேல், நாசர், சதீஷ் மன்னன், சனவுல்லா உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

**மரக்கன்று நடும் விழா**

தர்மபுரி: அன்னை சோனியா சமூக சேவை மையம் சார்பில், முன்னாள் எம்.எல்.ஏ., வடிவேல் கவுண்டர் நினைவாக பாளையம் புதூர் கிராமத்தில் ஒரு லட்சம் மரக்கன்று நடும் துவக்க விழா நடந்தது.
பாளையம்புதூர் அரசு மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி வளாகத்தில் நடந்த விழாவுக்கு, வினோபாஜ்ராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, மரக்கன்றுகளை நட்டு வைத்தார். தியாகி வெங்கடாசலம் தலைமை வகித்தார். பழனியப்பன், ஜெயராமன், பலராமன், மணி, குணசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆசிரியர் குமரவேல் நன்றி கூறினார். ஏற்பாடுகளை சோனியா சமூக சேவா சங்க தலைவர் ஹரிகிருஷ்ணன் செய்திருந்தார்.
* முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாளையொட்டி, தர்மபுரி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மரக்கன்று நடும் விழா நடந்தது. கல்லூரி முதல்வர் (பொ) அன்பரசன் தலைமை வகித்தார். மாவட்ட வன சரக அலுவலர் மாணிக்கம், வனவர்கள் சரவணன், செல்வம் மற்றும் கிருபாகரன், சாந்தி, ராஜன், டாக்டர் செந்தில்குமார், முருகதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. முன்னாள் மாணவர் நல சங்க தலைவர் சீனிவாசன், மாணவர்கள், பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோழிக்கு வெள்ளை கழிச்சல் நோய்கால்நடைத்துறை நீண்ட தூக்கம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வெயிலால், நாட்டு கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் பரவி வருகிறது. ஆலோசனை தர வேண்டிய கால்நடைத்துறை தொடர்பு கொள்ளவே

முடியாததால், மக்கள் விரக்தியில் உள்ளனர்.தமிழகத்தில் நாமக்கல், ஈரோடு ஆகிய இரு மாவட்டத்தில், மொத்தம் எட்டு கோடி, கறிக்கோழி, நாட்டுக்கோழி மற்றும் முட்டை கோழிகள் உள்ளன. தினமும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது.பல்வேறு நோய் தாக்குதலில் இருந்து அனைத்து வகையான கோழிகளையும் காப்பாற்ற, ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில் கோழி நோய் ஆராய்ச்சிக்கூடம் அமைந்துள்ளது. கோழி பண்ணைகளை பார்வையிட்டு, தக்க நேரத்தில் கோழி இன நோய்கள் குறித்து ஆராய்ந்து, பண்ணையாளர்களுக்கு தகுந்த யோசனைகள் வழங்குவது. கோழி பண்ணைகளில் நவீன தொழில் நுணுக்க யுக்திகளை கையாள பயிற்சியளிப்பதும் தான், கோழி ஆராய்ச்சிக் கூடத்தின் நோக்கம்.ஈரோடு மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பில் பெரும்பாலானோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது, கோடையில் நாட்டுக் கோழிகளை தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய் அதிகமாக பரவி வருவதால், பண்ணையாளர்கள் அதிருப்தியில் உள்ளனர். இந்நோயால், உடல் எடை குறைந்து, கோழி இறப்பு அதிகரித்ததால், நன்கு வளரும் முன்பே நாட்டுக்கோழியை விற்பனை செய்யும் முயற்சியில் பண்ணையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.இதுகுறித்து கால்நடைத்துறை கோழிநோய் ஆராய்ச்சி கூட உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறியதாவது:பொதுவாக கோடை காலத்தில் வெள்ளை கழிச்சல் நோய் பரவும். இதற்கு வேக்ஸின் (தடுப்பூசி) போட்டால், எந்த நோயும் தாக்காது. ஒவ்வொரு சனிக்கிழமையும் கால்நடைத்துறை மருத்துவமனையில், வேக்ஸின் போடப்படுகிறது. கோழி வளர்ப்பவரும், பண்ணையாளர்களும் இதனை பயன்படுத்தி, லாபத்தை பெருக்கி கொள்ளலாம், என்றார்.கோழி வளர்ப்போர் கூறியதாவது:சீசனுக்கு ஏற்ப கோழிகளுக்கு நோய் வருகிறது. பிற விலங்குகளுக்கு நோய் வந்தால், ஒரு வாரம் முதல், பத்து நாட்களுக்கு மேல் கூட அவை தாங்கும்.கோழிகளுக்கு நோய் வந்தால், மாலையில் மருந்து வைத்துவிட்டு, அதிகாலை பார்த்தால், பண்ணையில் பாதி கோழி இறந்துவிடும், மீதக்கோழியை காப்பாற்றுவது சிரமமாகும். எனவே, சூழலுக்கு ஏற்ப, கால்நடைத்துறையினரும், கோழி ஆராய்ச்சி கூடத்தினரும் யோசனைகளை வழங்கியும், மருந்துவ உதவிகளையும் செய்ய வேண்டும், என்றனர்.

**தரமான தேயிலையை உற்பத்தி செய்ய அறிவுரை: டான்டீ தொழிற்சாலை அலுவலர்களுக்கு பயிற்சி**

பந்தலூர்:பந்தலூர் அருகே சேரம்பாடி கார்டன் மருத்துவமனை வளாகத்தில், டான்டீ தேயிலை தொழிற்சாலை அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.

பொது மேலாளர் ஜார்ஜ் ஜான் வரவேற்றார். டான்டீ நிர்வாக இயக்குனர் டாக்டர் பாலாஜி பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:

கேரள மாநிலம் வயநாடு பகுதியை ஒட்டிய இப்பகுதியில் தனியார் மற்றும் டான்டீ தேயிலை தொழிற்சாலைகளுக்கு இடையே 5 முதல் 7 ரூபாய் வரை விலை வித்தியாசப்படுகிறது. அதேபோல், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் 15 ரூபாய் வரை விலை வித்தியாசப்படுகிறது. இதனால், பல்வேறு பிரச்னைகள் உருவாகின்றன. டான் டீயில் உற்பத்தியாகும் தூளுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில், தரமான உற்பத்தியை மேற்கொள்ள இந்த பயிற்சிமுகாம் நடத்தப்படுகிறது.

தேயிலை தூள் மார்க்கெட்டில் ஏற்ற தாழ்வு ஏற்பட்டபோதும் தரமான தேயிலை தூளை தயாரித்தால் எந்த காலகட்டத்திலும் நல்ல விலை பெற இயலும். முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த தொழிலிலும் சாதனை புரிய இயலும். பந்தலூர் சுற்றுவட்டார பகுதி டான்டீ தொழிற்சாலைகளில் பணியாற்றும் 50 பேருக்கு, யோகா பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

தற்போது, மதுரை பகுதியில் வரவேற்பை பெற்றுள்ள "டிப்டீ' சென்னை, திருச்சி, திருநெல்வேலி உள்ளிட்ட பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். வரும் காலங்களில் டான்டீ நிர்வாகம் லாபத்துடன் செயல்படுவதுடன்,தொழிலாளர்கள், அலுவலர்களுக்கான தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றிதரப்படும்.

இவ்வாறு பாலாஜி பேசினார்.

தொடர்ந்து, தொழிற்சாலை அலுவலர்கள்-கோட்டமேலாளர்கள் மத்தியில் தனி தனிகுழுக்கள் ஏற்படுத்தி, தரமான தேயிலை தூள் தயாரிப்பதுகுறித்த ஆலோசனைகள் கேட்கப்பட்டது.மாலை 5:00 மணி வரை நடந்தபயிற்சிமுகாமில், கேரள மாநிலம் கொச்சின், குன்னூர் பகுதிகளை சேர்ந்த தேயிலை தூள் கொள்முதல் நிலையத்தின் அலுவலர்கள் பயிற்சிஅளித்தனர்.

இதில், பொது மேலாளர் ஜெபராஜ், கோட்ட மேலாளர்கள் சுந்தர்ராஜன், உடையப்பன், சம்பத்,தேவராஜ், பட்டத்து ராஜன் மற்றும் தொழிற்சாலை அலுவலர்கள்,பணியாளர்கள் பங்கேற்றனர். சேரம்பாடிகோட்ட மேலாளர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்ததுடன் நன்றி கூறினார்.

**தேயிலை ஏலத்தில் விலை ஏற்றம்**

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலைக்கு 2 ரூபாய் விலை ஏற்றம் காணப்பட்டது. கடந்த இரு வாரங்களில் சரிவு ஏற்பட்ட நிலையில், இந்த விலை ஏற்றம் உற்பத்தியாளர்களை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது.

குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் ஒன்பதாவது ஏலம் கடந்த பிப். 28 மற்றும் மார்ச் 1ம் தேதிகளில் நடந்தது.

இதில், மொத்தம் 10.97 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 8.16 லட்சம் கிலோ இலை ரகமும், 2.81 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.

இதில், 91 சதவீதம் விற்பனையானது. இந்த வாரம் கிலோவுக்கு இரண்டு ரூபாய் விலை ஏற்றம் காணப்பட்டது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக 197 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக 275 ரூபாயும் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண ரகத்துக்கு 83 ரூபாயிலிருந்து 87 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 87 ரூபாயிலிருந்து 90 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 7 மற்றும் 8ம் தேதிகளில் நடக்கும் 10வது ஏலத்துக்கு மொத்தம் 9.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

**வெற்றிலைக்கு தண்ணீர் வழங்க கோரி முற்றுகை**

லாலாப்பேட்டை: வாடிவரும் வெற்றிலை கொடிக்காலை காப்பாற்ற தண்ணீர் கேட்டு, மாயனூர் பொதுப்பணித்துறை அலுவலகத்தை விவசாயிகள் நேற்று முற்றுகையிட்டனர். கரூர் மாவட்டம், லாலாப்பேட்டை பகுதிக்குட்பட்ட கள்ளப்பள்ளி, பிள்ளபாளையம், சிந்தலவாடி ஆகிய கிராமங்களில், 400 ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை விவசாயம் நடந்து வருகிறது. மாயனூர் காவிரிஆற்றிலிருந்து பிரிந்து வரும் தென்கரை வாய்க்கால் மற்றும் கட்டளை மேட்டுவாய்க்காலை நம்பித்தான், இப்பகுதியில் வெற்றிலை விவசாயம் நடந்து வருகிறது. தற்போது, இரண்டு வாய்க்காலும் ஊற்று தண்ணீர் கூட வராததால், வறண்டுபோய் கிடக்கிறது. இதனால் தண்ணீர் இல்லாமல் இப்பகுதியில் வெற்றிலை கொடிகள் எல்லாம் காய்ந்து வருகிறது. இந்நிலையில், லாலாப்பேட்டை வெற்றிலை கொடிக்கால் விவசாயிகள் சங்க தலைவர்மலைக்கொழுந்தன், கள்ளப்பள்ளி பஞ்சாயத்து தலைவர் தீபா ஆகியோர் தலைமையில், 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் தண்ணீர் கேட்டு, நேற்று காலை மாயனூர் பொதுப்பணித்துறை அலுவகலத்தை முற்றுகையிட்டு, போராட்டம் நடத்தினர். தகவல் அறிந்த குளித்தலை ஆர்.டி.ஓ., சிவசௌந்திர வள்ளி, சம்பவ இடத்துக்கு சென்று, ""இன்று (நேற்று) அல்லது நாளை (இன்று) தண்ணீர் விட, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார். இதையடுத்து விவசாயிகள் முற்றுகை போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். அப்போது, டி.எஸ்.பி., (பொ) இளங்கோ, தாசில்தார் ராஜகோபால், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் அறிவொளி ஆகியோர் உடனிருந்தனர்.

**மத்திய பட்ஜெட் விவசாயிகள் சங்கம் வேதனை**

தஞ்சாவூர்: மத்திய அரசின் பட்ஜெட்டில், விவசாயத்துறை வளர்ச்சிக்கு திட்டம் ஏதுமின்றி, அடியோடு புறக்கணித்து, அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வேதனை தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் துரை மாணிக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை:
நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்துறையில் ஆண்டு வளர்ச்சி, 2.4 சதவீதமாக வீழ்ச்சி அடைந்து விட்டது. தேசிய வருமானத்தில் விவசாய துறையின் பங்களிப்பு, 55 சதவீதத்திலிருந்து, 15 சதவீதமாக குறைந்து விட்டது. மக்களின் உணவு பாதுகாப்பு கேள்வியாகியுள்ளது. இந்நிலையில், மத்திய பட்ஜெட்டில் விவசாயிகளை காப்பாற்ற எவ்வித பெரிய அறிவிப்பும், திட்டங்களும் வெளியிடப்படவில்லை. விவசாய கடனுக்காக, ஏழு லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 55 சதவீதம் விவசாயிகளுக்கு கடன் கிடைத்த நிலை மாறி, 15 முதல், 30 சதவீதம் வரை விவசாயிகளுக்கு தான் கடன் கிடைக்கிறது. விவசாய கடனில் குறைபாடுகள் நிலவுகிறது.
மேலும், நீர்வள பாதுகாப்பு, நதிகள் இணைப்பு பற்றி எதுவும் அறிக்கையில் இடம் பெறவில்லை. தமிழகத்தில் வறட்சி நிலவியும், பேரிடர் பாதிப்பு நிவாரணம் ஏதும் அறிவிக்கப்படாதது, விவசாயிகளுக்கு பெரிதும் ஏமாற்றமளிக்கிறது. ஏழைகள் மற்றும் விவசாயிகளின் கழுத்தில், சுருக்கு கயிறை போட்டு இறுக்குவது போல, மத்திய பட்ஜெட் உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்

**மரக்கன்றுவழங்கல்**

தேவகோட்டை: முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு நகராட்சி பகுதியில் நகராட்சி தலைவர் சுமித்ரா மரக்கன்றுகளை நட்டார்.பிளாஸ்டிக் ஒழிப்பையும்,மரம் வளர்த்தலை அறிவுறுத்தி வாசகங்கள் அடங்கியபையுடன் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.கவுன்சிலர்கள் பங்கேற்றனர்.

**திடீரென இறக்கும் ஆடுகள் நஷ்டத்தில் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பாட்டக்குளத்தில், ஆடுகள் திடீரென இறந்து வருவதால், விவசாயிகள் பாதிக்கின்றனர்.பாட்டக்குளத்தில் 10க்கு மேற்பட்டோர், ஆடு, மாடு வளர்ப்பதையே தொழிலாக கொண்டு உள்ளனர். இங்கு 200க்கு மேற்பட்ட வெள்ளாடுகள்

வளர்க்கப்படுகிறது. கால்நடைகளுக்கு நோய் வந்தால், ஏழு கிலோ மீட்டர் தூரமுள்ள குன்னூர் ஆஸ்பத்திரி செல்கின்றனர். குன்னூர் செல்ல ஏழு கிலோ மீட்டர் நடத்தி செல்ல வேண்டி உள்ளதால, சிரமம் ஏற்படுகிறது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் போதே, கிழே விழுந்து சில இறக்கிறது. இப்பகுதியினர் பாதிக்கின்றனர். நேற்று மட்டும் இப்பகுதி ராமர் உட்பட இருவரது நான்கு ஆடுகள், நோயால் இறந்தன. அவர்கள் கூறியதாவது: கடந்த சில நாட்களாக ஆடுகள், நின்ற நிலையில் கீழே விழுந்து இறக்கிறது. ஆயிரகணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது,' என்றனர்.கால்நடை உதவி இயக்குனர் டாக்டர் செல்லச்சாமி,"" தகவல் எதுவும் வரவில்லை. விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

5.03.2013 A.M

நெற்பயிரை அழிக்கும் காட்டுப்பன்றிகள் மகசூல் பாதிக்கும் விவசாயிகள் கவலை



அதிராம்பட்டினம்: தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் கடற்கரையையொட்டி அலையாத்தி காடுகள் உள்ளன. இந்த காடுகளில் வெளிநாட்டு பறவைகள், பன்றிகள், முயல்கள், நரி போன்ற மிருகங்கள் வசிக்கின்றன. இவை காடுகளில் கிடைக்கும் உணவை சாப்பிட்டு வருகின்றன. தற்போது அலையாத்தி காடுகள் வறட்சியாக உள்ளதால் பன்றிகள் இரை தேடி கூட்டம் கூட்டமாக வெளியேறி வருகின்றன.தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் அடுத்த கரிசக்காடு, முடுக்குக்காடு, வள்ளிகொல்லைக்காடு, கருங்குளம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து அறுவடைக்கு தயாராகும் நிலையில் வைத்துள்ள நெல் வயல்களுக்குள் இரவு நேரங்களில் பன்றிகள் கூட்டம் கூட்டமாக புகுந்து பயிர் களை தின்று நாசப்படுத்தி வருகிறது. இதனால் விவசாயிகள் தீப்பந்தம், அரிக்கேன் லைட், பட்டாசுகளுடன் விடிய விடிய காவல் காக்கின்றனர். இதுகுறித்து அந்தப்பகுதி விவசாயிகள் கூறுகையில், 'தண்ணீர் இல்லாத நிலையில் மிகவும் கஷ்டப்பட்டு பம்ப்செட் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி சம்பா சாகுபடி செய்தோம். தற்போது அறுவடைக்கு தயாராகும் நிலையில் பன்றிகள் படையெடுப்பதால் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. சில பன்றிகளுக்கு தந்தங்கள் போல பற்கள் இருக்கின்றன. விரட்டிய விவசாயி ஒருவரை கடித்து குதறின. பன்றிகளை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்Õ என்றனர். முத்துப்பேட்டை வனச்சரகர் மாணிக்கம் கூறுகையில், 'பன்றிகள் சேதப்படுத்துவது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்Õ என்றார்.

நிவாரணம் வாங்க மறுத்து விவசாயிகள் சாலை மறியல்



மயிலாடுதுறை: மயிலாடுதுறை அருகே அரசு அறிவித்த நிவாரண தொகையை வாங்க மறுத்து விவசாயிகள் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.நாகை மாவட்டம் மயிலாடுதுறை அருகே உள்ள வில்லியநல்லூர் கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு அரசு அறிவித்த நிவாரணம் பெறுவதற்கான அறிவிப்பு வந்தது. ஐந்து கிராமங்களைச் சேர்ந்த 1,441 விவசாயிகளுக்கு ரூ.30 லட்சம் வரை இந்த வங்கிக்கு வந்திருப்பதாக வங்கி நிர்வாகம் தெரிவித்திருந்தது.இந்நிலையில் வில்லியநல்லூர், தாழஞ்சேரி, கொற்கை, அருவாப்பாடி மற்றும் ஐவநல்லூரைச் சேர்ந்த விவசாயிகள் 100க்கும் மேற்பட்டோர் நிவாரணம் வாங்க நேற்று வங்கிக்கு சென்றனர். ஆனால், ஒவ்வொருவருக்கும் ரூ.500, ரூ.600, ரூ.750, ரூ.1500 என பல்வேறு வகையில் அரசால் ஒதுக்கப்பட்டு அந்த பட்டியல்படி மூன்று விண்ணப்பத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு செல்லுங்கள்.

ஒரு சில நாட்களில் இந்த தொகையை வங்கியில் வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று அந்த வங்கியின் செயலர் அன்பு தெரிவித்தார்.இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள் ஒன்று திரண்டு வில்லியநல்லூர் தொடக்கவேளாண்மை வங்கி முன் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் மயிலாடுதுறையிலிருந்து பட்டவர்த்தி வழியாக செல்லும் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது.சாலை மறியலில் ஈடுபட்டவர்களுடன் மணல்மேடு போலீசார், தாசில் தார் பிச்சைராமன் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, இதுபோன்ற பாரபட்சமான நிவாரண தொகையை அரசு வழங்கியுள்ளது. கண்டிக்கத்தக்கது. இதை நாங்கள் வாங்கப் போவதில்லை என்று விவசாயிகள் கூறினர். உங்களது கோரிக்கையை சொல்லுங்கள் நாங்கள் அரசுக்கு தெரிவிக்கிறோம் என்று அதிகாரிகள் கூறினர். ஆனால், நிவாரணத்தை வாங்க மறுத்துவிட்டு விவசாயிகள் கலைந்து சென்றனர். விவசாயிகளின் மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அறிவிப்பு மட்டும் பெரிதாக உள்ளது

விவசாயி ஐவநல்லூர் சுரேஷ் கூறுகையில், அரசு ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தும் இந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு 500 கூட கிடைக்கவில்லை. அறிவிப்பு மட்டும் பெரிதாக இருக்கிறது. ஆனால், கையில் கிடைப்பதோ கொஞ்சம்தான். இந்த பகுதியில் மின்சாரம் இல்லாமல் மகசூல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வேண்டுமென்றே இந்தப்பகுதி விவசாயிகளுக்கு 7 சதவீதம் மட்டுமே பாதிப்பு என்று அறிவித்து இதுபோன்ற தொகையை ஒதுக்கி விவசாயிகளை அவமானப்படுத்தி விட்டனர் என்றார்.

**முதல்வரின் பாராட்டு விழாவை புறக்கணிக்க விவசாயிகள் முடிவு**



பட்டுக்கோட்டை: கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் முதல்வருக்கான பாராட்டு விழாவை புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அடுத்த தம்பிக்கோட்டை, துவரங்குறிச்சி பகுதியில் உள்ள 13 கிராமங்களை சேர்ந்த 175க்கும் மேற்பட்ட விவசாயிகள் நேற்று ஊர்வலமாக சென்று பட்டுக்கோட்டை ஆர்டிஓ ரஹமத்துல்லா கான், தாசில்தார் முத்துக்குமார், வேளாண் உதவி இயக்குனர் மோகன் ஆகியோரிடம் மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:தமிழக முதல்வர் அறிவித்துள்ள வறட்சி நிவாரணம் ஸீ15 ஆயிரத்தை தனியாகவும், பயிர் காப்பீடு தொகையை தனியாகவும் விடுபடாமல், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். தண்ணீர், மின்சார மின்றி, நாற்றுவிட்டு, உழவு செய்து தரிசாக விடப்பட்ட நிலங்களு ஏக்கருக்கு ஸீ15 ஆயிரம் வழங்க வேண்டும்.சம்பா தொகுப்பு திட்டம் என்ற பெயரில் நேரடி விதைப்பு, நடவு, டீசல் மானியம், சமுதாய நாற்றங்கால், பைப் மானியம் போன்றவற்றின் பயனாளிகள் பலருக்கும் உரிய தொகை மற்றும் இடுபொருள் வந்து சேரவில்லை. இவை அனைத்தையும் பயனாளிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும். சொட்டுநீர் பாசன வசதி செய்வதற்காக மனு கொடுத்து 9 மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் வசதி செய்து தரப்படவில்லை. அதை உடனே அமைக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளனர்.இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய


தலைவர் தம்பிக்கோட்டை ராஜராமலிங்கம் கூறுகையில், ‘இந்த மனுவின் நகலை தமிழக முதல்வருக் கும், மாவட்ட கலெக்டருக் கும் பதிவு தபாலில் அனுப்பியுள்ளோம். தமிழக முதல்வர் 9ம் தேதி தஞ்சையில் விவசாயிகள் சங்கம் நடத்தும் பாராட்டு விழாவிற்கு வருவதற்குள் இந்த குறைபாடுகளுக்கு தீர்வு தரவேண்டும். தீர்வு கிடைத்தால் விழாவில் பங்கேற்போம். இல்லாவிட்டால் தஞ்சை விழாவை புறக்கணிப்போம்Õ என்றார்.

**மீன் வள ஆராய்ச்சி சுற்றுச்சூழல் அறை மண்டபத்தில் திறப்பு**



மண்டபம்: மண்டபம் மத்திய கடல் ஆராய்ச்சி நிலையத்தில், நாட்டிலேயே முதல் முறையாக 1 கோடியில் குளிரூட்டப்பட்ட சுற்றுச்சூழல் அறை திறப்பு விழா நேற்று நடைபெற்றது.இதை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் சைதா ராவ்வால் திறந்து வைத்தார். பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: புவி வெப்பமயமாதலால் கடலில் பல்வேறு மாற்றம் நிகழ்ந்து வருகிறது. இதனால் கடலில் வெப்பநிலை உயர்ந்து வருகிறது. வெப்பநிலை உயரும் போது கடல்வாழ் உயிரினங்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படுகிறது. கடலில் வெப்ப நிலை உயரும் போது, அதற்கேற்ப சில மீன்கள் கடலில் வாழ்கின்றன. அதுபோன்ற மீன் இனங்களை கண்டறிந்து ஆராய்ச்சி செய்யப்பட உள்ளது. இதற்காக இந்தியாவிலேயே முதல்முறையாக மண்டபம் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் ஸீ1 கோடியில் குளிரூட்டப்பட்ட சுற்றுச்சூழல் அறை திறக்கப்பட்டுள்ளது. இங்கு கோபிகா, சீலா, பாறை ஆகிய மீன்களை ஆராய்ச்சிக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மூலம், வரும் காலங்களில் கடலில் வெப்பநிலை உயரும் போது மீன்கள் அதிகளவில் கிடைக்க வழிவகை செய்யப்படும். வரும் 2050 ஆண்டில் மீன்களின் தேவை 20 மில்லியன் டன்கள் இருக்கும். மீன்கள் இனப்பெருக்கத்தை அதிகரிக்க தமிழ்நாட்டில் 50 இடங்களில் செயற்கை பவளப்பாறை கடலில் விடப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். விழாவில் மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையதலைமை ஆராய்ச்சியாளர் கோபகுமார், ஆராய்ச்சியாளர் அப்துல் நாசர் பங்கேற்றனர்.

முட்டை விலை சரிவு 345 காசாக நிர்ணயம்



நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில், முட்டை விலையில் 15 காசுகள் குறைக்க முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 360 காசுகளாக இருந்த முட்டை விலை 345 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் நல்லதம்பி கூறியதாவது: தமிழகத்தில் முட்டை விற்பனை குறைந்துள்ளது. விற்பனையை அதிகரிக்க விலையை குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பண்ணை கொள்முதல் விலை 345 காசு என்றாலும், மைனஸ் 30 பைசா என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் ஒரு முட்டையை ரூ.3 முதல் ரூ.3.10 விலையில்தான் வாங்குகிறார்கள். எனவே, பண்ணையாளருக்கு முட்டை விற்பனையில் இழப்பு ஏற்படுகிறது. கடைகளில் ரூ.3.50 வரை விற்பனை செய்யலாம். இவ்வாறு நல்லதம்பி தெரிவித்தார். ஒரு கிலோ முட்டைக்கோழி விலை ரூ.46 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.58 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நீர்வள-நிலவள திட்டத்தில் விவசாயிகளுக்கு மானியம்

பழநி, : நர்வள- நில வள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானியம் வழ ங்கப்பட்டு வருவதாக வேளண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

பழநி பகுதி விவசாயிகளுக்கு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் உலக வங்கி யின் நிதி உதவியுடன் ஆய க்கட்டு விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடிக்கு ஹெக்டேருக்கு ரூ.9 ஆயிரம் மதிப்புள்ள உயிர் உரம், தக்கைபூண்டு, விதை நெல், கோனோவீடர், மார்க்கர் உள்ளிட்ட இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. மக்காச்சோளம், சோளம், சூரியகாந்தி மற்றும் பயறு வகை களை பயிரிடும் விவசாயிகளுக்கு ரூ.4 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் மானிய மாக வழங்கப்படுகிறது. அதுபோல், விவசாய கூலிகளுக்கு ஊக்கத்தொகையுடன் நவீன விவசாயம் தொடர்பான பயிற்சி அளி க்கப்பட உள்ளது. தொடர் ந்து விவசாயிகள் நவீன சா குபடி குறித்து அறிந்து கொள்ள

பட்டறிவு பயணம் அழைத்துச் செல்லப்பட உள்ளனர். தவிர, விவசாயிகளுக்கு மண்புழு கூடம் அமைப்பது தொடர்பான பயிற்சியும், மண்புழு கூடம் அமைப்பதகான உபகரணங்களும் இலவசமாக வழங்கப்பட உள்ளன. கைத்தெளிப்பான் மற்றும் விசை த்தெளிப்பான் ஆகியவை மானிய விலையில் வழங்கப்பட உள்ளன.

அதுபோல் பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி உரம் 1 ஹெக்டேருக்கு ரூ.500 மானியத்தில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் சேர விரும்பும் ஆயக்கட்டு விவசாயிகள் சிட்டா, குடு ம்ப அட்டை, 2 புகைப்பட ங்கள் ஆகியவற்றுடன் அப் பகுதி உதவி வேளாண் அலுவலர்களையோ அல் லது வட்டார வேளா ண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொ ள்ளலாமென பழநி வேளா ண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

### உழவர் மன்ற துவக்கவிழா

திண்டுக்கல், : வடமதுரை அருகேசேர்வைக்காரன்பட்டியில் செருநிறுவனம், நபார்டு வங்கி சார்பில் கிராமமேம்பாட்டு திட்ட பயிற்சி மற்றும் உழவர் மன்ற துவக்கவிழாநடைபெற்றது. நிறுவனச் செயலாளர் வெள்ளைச்சாமி வரவேற்றார். மாவட்ட முன்னோடி வங்கிமேலாளர் அர்ஜுனன்முத்¬தையா தலைமை வகித்தார்.

வங்கிச் சேவையினை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உழவர் மன்ற அமைப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்ககப்பட்டது.

நபார்டு வங்கி உதவிப் பொதுமோலளர் சஞ்சீவி திட்ட விளக்க உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக கலெக்டர் வெங்கடாசலம் கலந்து கொண்டு, தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி புதிய விவசாய தொழில்நுட்பங்கள் மூலம் அதிக வருவாய் ஈட்ட வேண்டும்.வங்கி மற்றும் விவசாயிகளிடையே நல்லுறவு இருக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும் என்றார்.

உழவர் மன்ற நிர்வாகிகள் கணக்குப்புத்தகம் வழங்கப்பட்டது. வடமதுரை கனராவங்கி, இந்தியன்ஓவர்சீஸ் வங்கி மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வங்கி மேலாளர்கள் ராஜமாணிக்கம், முரளிதரன், பாபுசந்தர், வட்டார வளர்ச்சி அலுவலர் மோகன், குமரேசன், வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் ராணி, ஊராட்சித் தலைவர் காதர்மீரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீகாந்த் நன்றி கூறினார்.

### திருப்புவனம், சிங்கம்புணரியில் ஏப்.5ல் வேளாண்மை கூட்டுறவு சங்க தேர்தல்

சிவகங்கை, : என்.என்.706 திருப்புவனம் வட்டார வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட், சிங்கம்புணரி ஆர்.டி.84 வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு மையம் ஆகிய

கூட்டுறவு சங்கங்களுக்கு ஏப்.5ம் தேதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அதிகாரியான வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை விடுத்துள்ள அறிக்கை: என்.என்.706 திருப்புவனம் வட்டார வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட் கூட்டுறவு சங்கத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவில் ஒரு உறுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பெண்கள் பிரிவில் 2 உறுப்பினர்கள், பொது பிரிவில் 4 உறுப்பினர்கள், மொத்தம் 7 நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

வாக்காளர் பட் டியல் அலுவலராக சிவகங்கை வேளாண்மை உதவி இயக்குநர் தனபாலும், தேர்தல் நடத்தும் அலுவலகாக திருப்புவனம் வேளாண்மை துணை இயக்குநர் மனோகரனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிங்கம்புணரி ஆர்.டி.84 வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மைய கூட்டுறவு சங்கத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பிரிவில் ஒரு உறுப்பினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் பெண்கள் பிரிவில் 2 உறுப்பினர்கள், பொது பிரிவில் 4 உறுப்பினர்கள், மொத்தம் 7 நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். வாக்கா ளர் பட்டியல் அலுவலராக எஸ்.புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணனும், தேர்தல் நடத்தும் அலுவலகாக எஸ்.வி.மங்கலம் தென்னை நாற்றுப்பண்ணை வேளாண்மை அலுவலர் தேவகி நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருப்புவனம் வட்டார வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிமிடெட், சிங்கம்புணரி ஆர்.டி.84 வேளாண் பொறியியல் பணி கூட்டுறவு மையம் ஆகிய 2 கூட்டுறவு சங்கங்களுக்கும் மார்ச் 29ம் தேதி காலை 10 முதல் 4 மணி வரை வேட்புமனுத் தாக்கலும், மாலை 4 முதல் 5.30 மணி வரை வேட்புமனு பரிசீலனையும் நடக்கிறது.

மாலை 6 மணிக்கு வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். 30ம் தேதி காலை 10 முதல் 4 மணி வரை வேட்புமனுக் களை திரும்ப பெறலாம். மாலை 5 மணிக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

ஏப்.5ம் தேதி காலை 8 முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவும், ஏப்ரல் 9ம் தேதி காலை 10 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்

சிவகங்கை, : மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை, செல்வி அறக்கட்டளை சார்பில் இடையமேலூர் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் நடந்தது.

ஊராட்சித் தலைவர் சுகந்தி முனியாண்டி தலைமை வகித்தார். அறக்கட்டளை இயக்குநர் ராஜன்

துவக்கி வைத்தார். தலைமைஆசிரியர் லெட்சுமி மரங்களின் பங்கு குறித்து பேசினார். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

மலம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் நடந்த முகாமிற்கு ஊராட்சித் தலைவர் செல்லக்கண்ணு தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் மீனாகுமாரி முன்னிலை வகித்தார். மரக்கன்றுகள் நடப்பட்டன. சாலூர் அரசு பள்ளியில் நடந்த முகாமிற்கு தலைமை ஆசிரியர் கலைச்செல்வி தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் லெட்சுமணன் இயற்கை வளங்கள் பாதுகாப்பு குறித்து பேசினார்.

கண்டாங்கிப்பட்டியில் நடந்த முகாமிற்கு ஊராட்சித் தலைவர் மஞ்சுளா பாலச்சந்தர் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ராஜேஸ்வரி முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் பாஸ்கரன் அம்பலம் உட்பட பலர் பேசினர்.

### கம்பத்தில் சுட்டெரிக்கும் வெயில் காய்கறி விவசாயம் கடும் பாதிப்பு

கம்பம், : கம்பம் பகுதியில் சுட்டெரிக்கும் வெயிலால் காய்கறி விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது.

கம்பம் மற்றும் அதனை சுற்றியுள்ள காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் வாழை, திராட்சை மற்றும் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. பெரும்பாலான விவசாயிகள் சொந்தமாக விவசாய நிலங்கள் வைத்துள்ளனர். ஒருசிலர் குத்தகைக்கு நிலங்களை எடுத்து விவசாய தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாய பயிர்களுக்கு ஆழ்துளை கிணறுகளில் மின்மோட்டார் அமைத்து அதன் மூலம் விளைநிலங்களில் உள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளாக பருவ மழை தவறியதால் இப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. காய்கறி விவசாயத்திற்கு நிலத்தடிநீர் அவசியம். இப்பகுதியில் காய்கறி பயிர்களுக்கு 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. தற்போது சுட்டெரிக்கும் வெயில் காரணமாக போதிய தண்ணீர் வசதி இல்லாமல் வாரம் ஒரு முறை கூட முறையாக தண்ணீர் பாய்ச்ச வழியில்லாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். பெரும்பாலான விவசாய நிலங்களில் உள்ள கிணறுகளில் இரண்டுக்கும் மேற்பட்ட விவசாயிகள் சேர்ந்து கொண்டு சுழற்சி முறையில் இரவு பகலாக முறை வைத்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வரும் முறையை கடைபிடித்து வருகின்றனர். வெயில் மற்றும் மின்தடை காரணமாக விவசாயிகள் எதிர்பார்த்தபடி பயிர்களை உரிய முறையில் வளக்க முடியாமல் இளம் காய்கறி பயிர்கள் கருகி வருவதாக விவசாயிகள் புலம்பி வருகின்றனர். கோடை மழை பெய்தால் மட்டுமே காய்கறி விவசாயம் தப்பிக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

### சின்னமனூரில் 300 ஏக்கர் நெற்பயிரை காப்பாற்ற முல்லைப்பெரியாற்றில் தண்ணீர் திறப்பு

### விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்களை காப்பாற்ற முல்லைப்பெரியாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. முல்லைப்பெரியாறு பாசனத்தை பயன்படுத்தி கம்பம் பள்ளத்தாக்கில் 15 ஆயிரம் ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்தாண்டு சரிவர மழை பெய்யவில்லை. முதல்போகம் சரிவர நடைபெறவில்லை. 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 4 ஆயிரம் ஏக்கர் மட்டுமே நெல் சாகுபடி நடந்தது. 11 ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டது.

பின்னர் எதிர்பாராதவிதமாக மழை பெய்ததால், முன்னெச்சரிக்கையாக தண்ணீர் திறக்கப்பட்டு அனைத்து கண்மாய், குளங்களில் தேக்கி வைக்கப்பட்டது. இரண்டாம் போகத்துக்கான நடவுப் பணிகள் துவங்கி தற்போது படிப்படியாக அறுவடை வரை முடிந்து விட்டது. ஆனால் சின்னமனூர் பகுதியில் 300 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடிக்கான பணிகள் சற்று தாமதமாக துவங்கியது. அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டதால் 300 ஏக்கர் பரப்பளவில் உள்ள நெற்பயிர்கள் காயத் துவங்கின. நெற்பயிர்களில் பால் பிடித்து நெல்மணிகள் உருவாகும் நேரத்தில் தண்ணீர் இன்றி நிலம் பாளம், பாளமாக வெடிக்கத் துவங்கியது. இதனால், விவசாயிகள் கவலையடைந்தனர். இப்பயிர்களை காப்பாற்ற பொதுப்பணித்துறையினர் தண்ணீர் திறக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

தற்போது பாசனத்துக்கான தண்ணீர் திறக்கப்படவில்லை. குடிநீருக்கு மட்டுமே தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளின் கோரிக்கையை தொடர்ந்து கருணை அடிப்படையில் வாய்க்கால்பட்டி பகுதியில் உள்ள மடை திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் சின்னமனூர் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், ‘இரண்டாம்போகத்திற்காக தாமதமாக நெல் நடவு செய்தோம். இன்னும் ஒரு மாதம் நெற்பயிர்களை வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். பால் பிடித்து நெல்மணிகள் உருவாக வேண்டிய நேரத்தில் தண்ணீர் இல்லாமல் போய் விட்டது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பொதுப்பணித்துறையினர் தண்ணீர் திறந்து உள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் 25 நாட்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது’, என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
5.03.2013 A.M

**கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்கக்கோரி மாநிலம் முழுவதும் சர்க்கரை ஆலைகள் முன் ஆர்ப்பாட்டம் கரும்பு விவசாயிகள் சங்கம் அறிவிப்பு**

ஈரோடு

தமிழக கரும்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் டி.பி.கோபிநாத் நிருபர்களிடம் கூறியதாவது:–

கரும்பு டன் ஒன்றுக்கு 2012–13–ம் ஆண்டுக்கு வெட்டுக்கூலி, லாரி வாடகை நீங்கலாக ரூ.3 ஆயிரத்து 500 வழங்கவேண்டும். வறட்சி மற்றும் மின்வெட்டால் காய்ந்து வரும் கரும்பை முன்னுரிமை அடிப்படையில் சர்க்கரை ஆலை வெட்டி அரைத்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ரங்கராஜன் குழுவின் பரிந்துரையை மத்திய அரசு அமல்படுத்தக்கூடாது ஆகியவை உள்பட பல கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் முன்பு தமிழக கரும்பு விவசாயிகள் சார்பில் போராட்டம் நடத்தப்படும்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து சரிவு 345 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை தொடர்ந்து சரிவடைந்து 345 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

15 காசுகள் சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 'கிடுகிடு' என உயர்ந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 28–ந் தேதி நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 10 காசுகளும், 2–ந் தேதி நடந்த கூட்டத்தில் 15 காசுகளும் குறைக்க முடிவு செய்தனர். இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 360 காசுகளாக குறைந்தது.

இதற்கிடையே நேற்று நடந்த கூட்டத்தில் முட்டை விலையை மேலும் 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 345 காசுகளாக குறைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– ஐதராபாத்–330, விஜயவாடா, தனுகு–330, பார்வாலா–325, சென்னை–376, மைசூர்–345, பெங்களூர்–335, மும்பை–362, டெல்லி–340, கொல்கத்தா–360.

கறிக்கோழி கிலோ ரூ.56–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.2 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.58 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி விலை கிலோ ரூ.46 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

ஈஸ்டர் பண்டிகை நெருங்கி வருவதை முன்னிட்டு கேரளாவில் முட்டை நுகர்வு பொதுமக்களிடையே குறைந்து உள்ளது. பிற மண்டலங்களிலும் முட்டையின் விலை குறைந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். கடந்த 5 நாட்களில் மட்டும் நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 40 காசுகள் குறைக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

**குன்னூர் ஏல மையத்தில் 91 சதவீத தேயிலை தூள் விற்பனை**

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 91 சதவீத தேயிலை தூள் விற்பனையானைது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள். விற்பனை எண் 9–க்கான ஏலம் கடந்த 28, 1 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 97

ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 8 லட்சத்து 16 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 81 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

91 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 91 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.2 விலை உயர்வு இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 197 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 275 ரூபாய் என்று உயர்ந்தபட்ச விலையாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 83 ரூபாயில் இருந்து 87 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 110 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 87 ரூபாயில் இருந்து 90 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 110 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 10–க்கான ஏலம் வருகிற 7, 8 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 9 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**தோட்டக்கலை துறையில் 10 ஆண்டுகள் பணி முடித்த பண்ணை தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய கோரி ஆர்ப்பாட்டம்**

ஊட்டி,

தோட்டக்கலை துறை யில் 10 ஆண்டுகள் பணி முடித்த பண்ணை தொழிலாளர்களைபணி நிரந்தரம் செய்ய கோரி நீலகிரி மாவட்ட தோட் டக்கலை இணை இயக்கு னர்அலுவலகம் முன்பு பண்ணை தொழி லாளர் கள் போராட்டம் நடத்தினார்கள்.

பண்ணை தொழிலாளர்கள் போராட்டம்

தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப் படைப் பணியாளர்கள் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஊட்டி ரோஸ் கார்டன் அருகே உள்ள மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் அலுவலகம் முன்பு பண்ணை தொழி லாளர்கள் நேற்று காலை 11 மணியளவில் போராட்டம் நடத்தினார்கள்.

இந்த போராட்டத்திற்கு பண்ணை தொழிலாளர் சங்கத்தின் தேசிய தலைவர் கே.கணேசன் தலைமை தாங்கி னார். இதில், மாநில பொது செயலாளர் எம்.சண்முகம், மாநில பொருளாளர் ஜி.கோ தண்டபாணி, நீலகிரி மாவட்ட தலைவர் எஸ்.ரகு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பணி நிரந்தம் செய்ய கோரிக்கை

இந்த போராட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் பண்ணை தொழிலாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். பின்னர் அவர்கள் தோட்டக்கலை துறையில் 10 ஆண்டகளாக பணிபுரியும் அனைவருக்கும் கால முறை ஊதியம் வழங்க வேண்டும், பணி நிரந்தரம் செய்ய வேண்டும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை பண்ணை தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கோஷமிட்டனர்.

இதையடுத்து, பண்ணை தொழிலாளர் சங்கத்தின் தேசிய தலைவர் கே.கணேசன் நிருபர்களிடம் கூறியதாவது:– தமிழகத்தில் தோட்ட துறை பண்ணை பணியளார்கள் சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் பணி புரிந்து வருகி றார்கள். இதில், நீலகிரி மாவட் டத்தில் மட்டும் சுமார் ஆயி ரத்திற்கும் மேற்பட்டோர் பணி புரிந்து வருகிறார்கள். இவர்கள் ஊட்டி அரசு தாவர யில் பூங்கா, ரோஸ் கார்டன், குன்னூர் சிம்ஸ் பூங்கா, காட்டேரி பூங்காக்களில் தினக்கூலியாக பணி புரிந்து வருகிறார்கள்.

இளநிலை உதவியாளர் பணி வழங்க கோரிக்கை

10 ஆண்டுகள் பணி முடித்த பண்ணை பணியாளர்களுக்கு கால முறை ஊதியம் மற்றும் பணிநிரந்தம் செய்ய வேண் டும். தோட்டக்கலை துறையில் பணிபுரிகின்ற கல்வி தகுதி உள்ள அடிப்படை பணியாளர் களுக்கு இளநிலை உதவியாளர் பதவி வழங்க வேண்டும். அடிப்படை பணியாளர்களுக்கு தொழில் வரியை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலிறுத்தி தற்போது போராட்டம் நடைபெற்று வருகிறது.

பண்ணை பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதை 58 ஆக இருந்ததை எதிர்த்து சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தோம். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சந்துரு பண்ணை பணியாளர் களின் வயது வரம்பை 60 ஆக உயர்த்தி தீர்ப்பு கூறி உள்ளார். இந்த தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தகோரியும், பணி நிரந்தம் செய்யப்பட்ட ஆயிரத்து 83 பண்ணை பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியம் வழங்கி கோரியும் போராட்டம் நடத்தி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக மாவட்ட செயலாளர் மோகன்குமார் வரவேற்றார். முடிவில் பலராமன் நன்றி கூறினார்.

**கறவை மாடுகள் வாங்க கடன் உதவி வழங்க வேண்டும் பெண்கள் கோரிக்கை**

தஞ்சை

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைத்தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கடம்பன்குடி ஊராட்சி, பூசாரி தெருவை சேர்ந்த கடம்பன்குடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க தலைவர் ரஞ்சன் தலைமையில் 30–க்கும் மேற்பட்ட பெண்கள் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ்குமாரிடம் ஒரு கோரிக்கை மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:–

நாங்கள் அனைவரும் கடம்பன்குடி பூசாரி தெருவில் வசித்து வருகிறோம். எங்கள் ஊர் பால் கூட்டுறவு சங்கம் மூலமாக தஞ்சாவூர் ஆவின் நிலையத்திற்கு பால் அனுப்பப்படுகிறது. எங்களுக்கு இலவச கறவை மாடு வழங்கப்படவில்லை எனவே தயவு செய்து வங்கியின் மூலம் மானியத்துடன் கடன் கொடுத்து, கறவை பசு பெற ஆவணம் செய்ய வேண்டுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறி உள்ளனர்.

**வேதாரண்யம் பகுதிகளில் மரக்கன்றுகள் வினியோகிக்கும் பணி காமராஜ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்**

வேதாரண்யம்,

வேதாரண்யம் பகுதிகளில் மரக்கன்றுகள் வினியோகிக்கும் பணியை காமராஜ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

மரக்கன்றுகள் வினியோகம்

நாகை மாவட்டம் வேதாரண்யம் தொகுதி முழுவதும் முதல்–அமைச்சர் பிறந்த நாளையொட்டி பலன் தரும் மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. இதற்காக கொய்யா, நெல்லி, சப்போட்டா, எலுமிச்சை, மா, பலா, தென்னை போன்ற மர கன்றுகள், பூச்செடிகள் அனைத்து ஊர்களிலும் வினியோகம் செய்யப்பட உள்ளது. வேதாரண்யம் தொகுதியில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் வரவழைக்கப்பட்டுள்ளன. இந்த மரக்கன்றுகளை ஊர்ஊராக வழங்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

முன்னதாக மரக்கன்றுகள் வினியோகத்தை வேதாரண்யத்தில் என்.வி.காமராஜ் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் காமராஜ் எம்.எல்.ஏ., தலைஞாயிறு ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நடுவதற்கு ஒன்றியக்குழு தலைவர் தமிழ்வாணன், அ.தி.மு.க. தலைஞாயிறு ஒன்றியச் செயலாளர் அவை.பாலசுப்பிரமணியன் ஆகியோரிடம் மரக்கன்றுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் திட்டக்குழு உறுப்பினர் ரமணி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியக்குழு துணை தலைவர் வாசுதேவன், முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் காளிதாசன், மாவட்ட பிரதிநிதி

வீரராசு, ஜெயலலிதா பேரவை ஒன்றிய பொறுப்பாளர் வீரமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில் தீவனசோளம் நடவு கலெக்டர் சி.நடராசன் தகவல்**

திருவாரூர்,

திருவாரூர் மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில் தீவனசோளம் பயிரிட விவசாயிகளுக்கு கலெக்டர் சி.நடராசன் அழைப்பு விடுத்துள்ளார்.

திருவாரூர் மாவட்ட கலெக்டர் சி.நடராசன் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு</u>

தமிழகத்தில் கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனத்தில் வைக்கோல் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பாக, டெல்டா மாவட்டங்களில் பாரம்பரியமாக நெல் பயிரிடப்பட்டு வைக்கோல் முக்கிய உலர்தீவனமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நிலவிவரும் வறட்சியான சூழ்நிலையால் தேவைக்கும், உற்பத்திக்கும் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை சமாளிக்க 8 டெல்டா மாவட்டங்களுக்கும் தமிழக அரசு ரூ.15 கோடி நிதி ஒதுக்கியுள்ளது.

குறுகிய கால தீவன சோளப்பயிர் பயிரிடுவதன் மூலம் 55 லிருந்து 60 நாட்களில் கால்நடைகளுக்கு வேண்டிய பசுந்தீவனம் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், தீவன சோளப்பயிரை காய்ந்த பிறகும் வைக்கோலைவிட அதிக சத்துள்ள சோளத்தட்டையாக கால்நடைகளுக்கு அளிக்கலாம். இதனை கருத்தில்கொண்டு திருவாரூர் மாவட்டத்தில் 700 ஏக்கரில் தீவன சோளப்பயிர் பயிரிட நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதற்கான விதை அரசால் வழங்கப்படுகிறது.

<u>தீவன சோளம் சாகுபடி</u>

ஒரு ஏக்கர் தீவன சோளப்பயிர் சாகுபடிக்கு ஆகும் மொத்த செலவில் 50 சதவீதம் மான்யத்தொகையாக அரசு வழங்குகிறது. ஒரு பயனாளி குறைந்தபட்சம் 1/2 ஏக்கர் பயிரிட வேண்டும். நீர்பாசன வசதி அவசியம் இருத்தல் வேண்டும். ஒரு ஏக்கரில் சுமார் 10 டன் தீவனப்பயிர் கிடைக்கும்.

அறுவடை செய்த பசுந்தீவனத்தை தங்கள் தேவைக்கு போக மீதமுள்ளதை கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம் அதன் உறுப்பினர்களுக்கு விற்பனை செய்திட வேண்டும். தீவன பயிர் உற்பத்தி செய்த பயனாளிகளிடமிருந்து வாங்கி அதை 50 சதவீத மானிய விலையில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுக்கு விநியோகிக்க உள்ளது.

இதன்மூலம் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கவும் கால்நடை வளர்க்கும் ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் சத்துள்ள பசுந்தீவனம் கிடைக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

எனவே, நீர்ப்பாசன வசதியுடன் நிலம் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற அருகிலுள்ள கால்நடை மருந்தகங்களை தொடர்புகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

**கடலூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. விவசாய பிரிவு சார்பில் 6,500 மரக்கன்று மற்றும் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கினார்**

நெல்லிக்குப்பம்,

கடலூர் கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. விவசாய பிரிவு சார்பில் 6 ஆயிரத்து 500 மரக்கன்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் எம்.சி.சம்பத் வழங்கினார்.

<u>நலத்திட்ட உதவிகள்</u>

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா பிறந்தநாளையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட விவசாய பிரிவு சார்பில் மரக்கன்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நெல்லிக்குப்பத்தை அடுத்த சாத்திப்பட்டு கிராமத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட விவசாய பிரிவு செயலாளர் காசிநாதன் தலைமை தாங்கினார். விவசாய பிரிவு தலைவர் புஷ்பராஜ், அ.தி.மு.க. மாவட்ட பொருளாளர் ஜானகிராமன், அண்ணாகிராம ஒன்றிய குழு தலைவர் சுந்தரிமுருகன், துணைத்தலைவர் எம்.சி.சம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் விபீஷணன், தொகுதி செயலாளர் ராமசாமி அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் கலந்துகொண்டு 6 ஆயிரத்து 500 மரக்கன்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி பேசியதாவது:–

அனைத்தையும் மிஞ்சியது

தமிழக முதல்வர் ஜெயலலிதா தனது பிறந்தநாளில் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் மற்றும் மரக்கன்றுகள் போன்றவற்றை வழங்க வேண்டும் என கூறினார். அதன் பேரில் கடந்த 24–ந் தேதி முதல் நேற்று வரை பிறந்தநாளை கொண்டாடி வருகிறோம்.

ஆனால் இதற்கு முன்பு நடந்த நிகழ்சியை காட்டிலும் இந்த நிகழ்ச்சி அனைத்தையும் மிஞ்சியது. ஏன் என்றால் இந்த மரக்கன்று வழங்குவதால் எதிர்காலத்தில் அனைவருக்கும் மிகவும் பலன் பெறுவார்கள். இதனால்தான் கடந்த 20–ந் தேதி முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்பேரில் 65 லட்சம் மரக்கன்று நடும் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த மரக்கன்றுகள் முழுவதும் படிப்படியாக நடப்பட்டு பாதுகாக்கப்படும்.

பாதுகாத்து வளர்க்க வேண்டும்

அசோக மன்னனும் மரம் நட்டு இருக்கிறார். அதேபோல முதல்–அமைச்சர் ஜெயலலிதாவும் மரம் நட்டுள்ளார். ஏன் என்றால் மரங்கள் இருந்தால்தான் மழை பெய்யும். மழை பெய்தால்தான் நாடு செழிக்கும்.

மேலும் மரம் நடும் திட்டத்தால் சுற்றுச்சூழலை பாதுகாத்து, சுகாதாரமான காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதற்காக முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இதுபோல் வேறு எந்த தலைவரும் சிந்தித்தது இல்லை. ஆகையால் மரத்தை பெற்றுக்கொண்ட பொதுமக்கள் அவற்றை முறையாக பாதுகாத்து வளர்க்க வேண்டும்.

இலவச மிக்சி–கிரைண்டர்

பெண்களை முன்னிலைப்படுத்தும் வகையிலும், கண்ணீரை துடைக்கும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா திட்டம் கொண்டு வந்துள்ளார். ஆகையால் மிக விரைவில் உங்கள் பகுதிக்கு இலவச மிக்சி, கிரைண்டர், பேன் வழங்கப்படும். மேலும் பல்வேறு விலையில்லா திட்டத்தை முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழங்கி வருகிறார். ஆகையால் இந்த திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ. அய்யப்பன், ஒன்றிய விவசாய பிரிவு செயலாளர் ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் லூர்துமேரி அந்தோணிராஜ், மாவட்ட கவுன்சிலர் என்.டி.கந்தன் உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் கிளை செயலாளர் ராமமூர்த்தி நன்றி கூறினார்.

**மேலப்பாளையத்தில் ஊரக மக்கள் பங்கேற்பு முகாம் 320 எக்டேர் தரிசு நிலங்களை வேளாண் நிலங்களாக மாற்ற நடவடிக்கை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட மேலாளர் தகவல்**

நொய்யல்,

மேலப்பாளையத்தில் 320 எக்டேர் தரிசு நிலங்களை வேளாண் நிலங்களாக மாற்ற முடிவு செய்யப்பட்டு உள்ளது என்று ஊரக மக்கள் பங்கேற்பு முகாமில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட மேலாளர் தெரிவித்து உள்ளார்.

ஊரக மக்கள் பங்கேற்பு முகாம்

ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தில் 320 எக்டேர் தரிசு நிலங்களை 7 ஆண்டுக்குள் வேளாண் நிலங்களாக மாற்றி உணவு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட மேலாளர் வெள்ளைச்சாமி தெரிவித் தார். க.பரமத்தி ஒன்றியம் புன்னம் ஊராட்சிக்கு உட் பட்ட மேலப்பாளையத்தில் ஒருங்கிணைந்த நீர்வடி பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் ஊரக மக்கள் பங்கேற்பு முகாம் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு புன்னம் ஊராட்சி தலைவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கி, முகாமை துவக்கி வைத்தார். வேளாண்மை வளர்ச்சி அணி உறுப்பினர் அண்ணாத்துரை வரவேற்றார். ஒன்றிய குழு உறுப்பினர் மணிமேகலை ரமேஷ், ஊராட்சி துணை தலைவர் மாலதி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட மேலாளர் வெள்ளைச்சாமி திட்டம் குறித்து விளக்கி பேசினார். அப்போது அவர் கூறிய தாவது:

320 எக்டேர் நிலம் தேர்வு

பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு மற்றும் மூலப்பொருள்களின் தேவையை பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த வகையில் இப்பகுதியில் தரிசுநிலங்களாக உள்ள 492 எக்டேர் நிலங்களை அதிகாரிகள் ஆய்வு செய்து அதில் 320 எக்டேர் நிலங்களை திட்டத்திற்காக பயன்படுத்த தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் 7ஆண்டுக்குள் வேளாண் நிலங்களாக மாற்றிட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இதனால் வருங்காலங்களில் உணவு உற்பத்தியை பெருக்க இத்திட்டம் உதவும். இத்திட்டத்தின் நோக்கமே மழை காலங்களில் வீணாக ஆறு, கடல்

பகுதிகளுக்கு செல்லும் மழைநீரை சேமித்து வைத்து தரிசு நிலங்களை வேளாண் நிலங்களாக மாற்ற இத்திட்டம் மிகவும் உதவு கிறது.

பல்வேறு பணிகள்

மண்வரப்பு, கல்வரப்பு, தடுப்பணை அமைத்தல், குளம், கால்வாய் தூர்வாருதல், நிலம் சீரமைத்தல், தடுப்பு நீர்க்குட்டை, பண்ணைக் குட்டை, தடுப்புசுவர் கட்டுதல் போன்ற பல்வேறுபணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக நீர்வடி பகுதி சங்கம் உருவாக்கப்பட்டு உறுப் பினர்களை கொண்டு திட்டங் கள் தீர்மானிக்கப்பட்டு பணி கள் துவங்கப்பட உள்ளது. இவ்வாறு திட்ட மேலாளர் வெள்ளைச்சாமி பேசினார்.

விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி

நீர்வடிபகுதி மேலாண்மை திட்டம் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகளை அரக் கோணம் நாடக மன்ற குழுவினர் நடத்தினர். வேளாண்மை வளர்ச்சி அணி உறுப்பினர்கள் அண்ணாத் துரை, இளங்கோ, சித்ரா, பாஸ்கரன் உள்பட விவசாயி கள் பலர் கலந்து கொண் டனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் வன விலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வனத்துறை சார்பில் வழங்கப்பட்டது

திண்டுக்கல்

திண்டுக்கல் மாவட்டத்தில் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது.

வனவிலங்குகளால் இழப்பு

திண்டுக்கல் மாவட்டத்தில் வனப்பகுதிகளில் வன விலங்குகள் அதிக அளவில் உள்ளன. வனப்பகுதியை ஒட்டியுள்ள ஆயக்குடி, பெரியம்மாபட்டி, ஆண்டிபட்டி, விருப்பாட்சி, குட்டுப்பட்டி, சட்டப்பாறை பகுதிகளில் சோளம், கரும்பு, மக்காசோளம், நிலக்கடலை, உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.

இந்த பயிர்கள் அனைத்தும் யானைகள், காட்டுமாடுகள், பன்றிகளுக்கு மிகவும் பிடித்தமான உணவாகும். வனப்பகுதியில் இருந்து வெளியேறும் விலங்குகள், விவசாய நிலங்களுக்கு புகுந்து, விவசாய பயிர்களை நாசம் செய்கின்றன. மேலும் சில நேரங்களில் மனித உயிரிழப்பும் ஏற்பட்டு விடுகிறது.

நிவாரண உதவி

அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் இந்த ஆண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு தொகையை கலெக்டர் வெங்கடாசலம் வழங்கினார். இதில் திண்டுக்கல் வனக்கோட்டத்தில் வன விலங்குகளால் பயிர்சேதம் ஏற்பட்ட விவசாயிகள் 9 பேருக்கு இழப்பீடாக ரூ.2 லட்சத்து 74,500–ம், காயம் அடைந்த 2 பேருக்கு ரூ.50 ஆயிரம், கால்நடைகள் பாதிக்கப்பட்டதற்காக ரூ.7,500 என மொத்தம் 12 பேருக்கு ரூ.3 லட்சத்து 32 ஆயிரம் வழங்கப்பட்டது.

மேலும் வனத்துறை மூலம் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்ட பாரதிநகர் கிராமத்தின் 5 சுயஉதவிக்குழுக்களுக்கு சிறுதொழில் செய்ய சிறுவணிகக்கடனாக வனமேம்பாட்டு நிதியில் இருந்து சுழற்சிநிதியாக ரூ.7 லட்சத்து 20 ஆயிரம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட வன அலுவலர் சம்பத் மற்றும் வனத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மா மரங்களில் தத்துப்பூச்சி தாக்குதலை தடுப்பது எப்படி? பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் விளக்கம்**

ஸ்ரீவில்லிபுத்தூர்,

மா மரங்களில் தத்துப் பூச்சி தாக்குதலை தடுப் பது குறித்து வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.

மாமரங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசி ரியர் மற்றும் தலைவர் அமலா பாலு ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழகத்தில் தென் மாவட்டங் களை சேர்ந்த மா சாகுபடியாளர்கள் மாமரங் களில் தற்போது பூத்து உள்ளதா? மா இலைகள் பகல் வெயிலில் பளபள வென்று எண்ணை தேய்த்து விட்டதுபோல் மினுமினுப்பாக உள்ளதா? என கவனிக்க வேண்டும். அப்படி இலைகள் மினு மினுப்பு டனும், பிசுபிசுப்பாக வும் காணப் பட்டால் இந்த இலைகளுக்கு மேலுள்ள பூங்கொத்துகளை உற்று நோக்கினால் சிறிய பழுப்பு நிறமுள்ள, பக்கவாட்டில் நகரக்கூடிய தத்துப் பூச்சிகளை காணலாம். மா தத்துப்பூச்சிகள் முட்டைகளை இளங்குருத்துகள், பூ கொத் துகள், இலைகளில் துளைத்து வைக்கின்றன. இதனால் முட்டை உட் செலுத்தப் பட்ட பகுதிக்கு மேற்பகுதி வாடி கருகிவிடும். மேலும் முட்டையில் இருந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் மற்றும் முழு வளர்ச்சியடைந்த

தத்துப்பூச்சிகள் இலைக் குருத்து மற்றும் பூங்கொத்து களின் சாற்றினை உறிஞ்சுகின்றன. இதனால் பூங் கொத்து கள் வலு இழக்கின் றன. தாக்குதல் தீவிரப் பட்ட £ல் பூ மொட்டு கள், பூக்கள், இளம் பிஞ்சுகள் காய்கள் உதிர்கின்றன.

குறைக்கலாம்

மேலும் இந்த இந்த பூச்சிகள் வெளியேற்றும் தேன்பாகு போன்ற கழிவுகள் இலைகளின் மீது படிந்து கரும்பூசணம் வளர்ந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகிறது. நெருக்கி நடப்பட்ட தோப்புகளில் சேதம் விரைந்து பரவும். மல்கோவா, நீலம்,செந்தூரம் போன்ற ரகங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாவதுண்டு. பெங்களூரா மற்றும் சப்பட்டை எனப்படும் பங்கனப்பள்ளி அல்லது பனேசன் ரகங்களில் தாக்குதல் சற்று குறைந்து காணப்படும் இதை கட்டுப்படுத்த மா நடவு செய்யும்போதே சிபாரிசு செய்யப்படும் இடை வெளியில் மரங்களை நட வேண்டும். முடிந்தவரை பாதிப் புக்கு உள்ளான பூங் கொத்து களை காவத்து செய்து அகற்றி எரித்து அழிக்க வேண்டும்.

காய்ந்த சருகுகளை தீயிட்டு புகைமூட்டம் செய்து தாக்குதலை குறைக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒன்றரை மில்லி பாசலோன் அல்லது ஒருகிராம் அசிப்பேட் அல்லது ஒன்றே கால் மில்லி மானேகுரோட்டாபாஸ் வீதம் கலந்து தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து கரைசல் இலைகளில் நன்கு படிவதற்காக சாண் டோ விட், இன்ட்ரான் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு அரைமில்லி வீதம் சேர்த்து கலக்கி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.